தமிழ் நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1971 டிசம்பர் 4.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Report on aided schools

*66 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Committee constituted to go into the various questions relating to aided Elementary and Secondary Schools including service conditions of aided schools has submitted its report; and

(*b*) if so, whether a copy will be placed on the Table of the House?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. பரிசீலனைக்குப் பிறகு அறிக்கை அவைமுன் வைக்கப்படும்.

திரு. கே. டி. கே தங்கமணி : தனியார் துறையில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்கள் சம்பந்தமாக உறுதியான நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்குச் சட்டத்தில் பலகீனம் இருக்கிறது என்ற முறையிலே பால் அவர்கள் கமிட்டி சிபார்சு தந்து 9 மாதங்கள் ஆகியும்கூட, அதன்பேரில் ஒரு சட்ட அமைப்பு வரும் என்று சொல்லியும் இன்னும் வராமல் இருக்கிறது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட தேதியை நிர்ணயித்து அதற்குள்ளாவது சட்டம் கொண்டு வரப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தக் குழு தங்களுடைய அறிக்கையை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறது. அதுகுறித்து சட்டத்துறை, கல்வித் துறை, நிதித் துறை ஆகிய துறைகளெல்லாம் பரிசீலனை செய்து அதற்குப் பிறகு அவர்கள் கூறிய கருத்துகளின் அடிப்படையில் அதைச் சட்டமாகக் கொண்டுவரவேண்டும். சட்டமாகக் கொண்டுவந்து இரு அவைகளிலும் நிறைவேற்ற வேண்டும். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Education say as to how long it will take to finalise the report and when it will be ready for action?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, காலவரையறை குறிப்பிடுவதற்கில்லை. ஆனால், அந்தப் பரிசிலனை விரைவில் முடியும் என்று தெரிகிறது. அடுத்த தொடர்க் கூட்டத் திலாவது கொண்டுவர இயலுமா என்பதைப்பற்றித் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Many aided schools are doing excellent work in the matter of extending educational facilities to students in the State. They have the same text-books, and following the same syllabus and they are doing the same work as in Government institutions for examinations. On this basis there is need to improve the condition of aided school teachers. May I know from the Hon. Minister whether he will show sympathy and see that their condition is improved?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதற்காக அமைக்கப்பட்ட குழுவானது, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்து தங்கள் அறிக்கையைச் சமர்பித்திருக்கிறார்கள். அதுதான் அரசாங்கத்தி னுடைய பரிசிலனையில் இருக்கிறது. அதன்மீது தக்க முடிவு எடுக்கப்பட்டதற்குப் பிறகு, சட்ட வடிவு கொடுக்கப்பட்டு, இரு அவைகளிலும் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்காக அவைமுன் வைக்கப்படும்.

திரு. மு. சுருளிவேல் : தலைவர் அவர்களே, பொதுவாக அரசின் முழு உதவியும் பெற்று, ஆனால் தனியார் பெயரில் நடத்தப்படுகிற பள்ளிகளில் ஏராளமான ஊழல்களும் தவறுகளும் இன்றையதினம் நாட்டில் நடைபெற்று வருகின்றன. எடுத்துக்காட்டாக, போடி நாயக்கனூர் தொகுதியில் உப்புக்கோட்டையிலுள்ள பச்சை யப்பன் உயர்நிலைப்பள்ளியில் மாணவர்களுடைய பெயர்களைப் போட்டு அரசினிடமிருந்து உதவிப்பணம் பெறுகிறார்கள். ஆனால் நிர்வாகத்தினர் அந்தத் தொகையை மாணவர்களுக்கு விநியோ கிக்காமல் கையாடல் செய்திருக்கிறார்கள். எனவே, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள எல்லாப் பள்ளிகளையும்—துவக்கப் பள்ளிகளை யும் உயர்நிலைப் பள்ளிகளையும்—நம்முடைய அரசே ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நிலையை உண்டாக்குமா? இந்தப் பிரச்னையை மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற கருத்து பல முறை இந்த அவையில் எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. அதற்குப் பதிலும் அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. எல்லாத் தனியார்த் துறைப் பள்ளிகளும் கல்லூரிகளுமே ஊழல்களோடுதான்

1971 டிசம்பர் 4]

நடத்தப்படுகின்றன என்று கூறுவதற்கில்லை. சிலபல கல்லூரிகளும் பள்ளிகளும் அப்படிப்பட்ட முறையில் நடைபெறுமானால் அவற்றை எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்பதை ஆராய குழு அமைக்கப்பட்டு, அக்குழு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள குறைகளை தக்க முறையில் ஆராய்ந்து பரிந்துரைகளை அளித்திருக்கிறார்கள். இப்பொழுது தக்க நடவடிக்கை எடுக்கச் சட்டத்திலே போதுமான அளவுக்கு இடமில்லாத காரணத்தால், சட்டத்தைச் செம்மையாகத் திருத்தி, அதைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த என்ன செய்யலாம் என்பதற்கு, குழு பல்வேறு தலைப்புக்களில் பரிந்துரைகளை வழங்கியிருக்கிறது. அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் சட்டம் திருத்தப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற குறைபாடு ஏற்படாமலிருக்கும். உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பள்ளியிலிருக்கும் குறைபாடுகள் அதிகாரிகளால் ஆராயப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: தனிப்பட்ட மானேஜ்மென்ட் பள்ளிகளில் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்குச் சர்க்காரே நேரடியாகச் சம்பளம் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகள் சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது சாதாரணமாக ஊராட்சி ஒன்றியத்திலிருந்து சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டு பல ஊராட்சி ஒன்றியங்களில் காலதாமதம் ஏற்படுகிறது என்ற காரணத்தால் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நேரடியாக ட்ரெஷரியிலிருந்து ஊராட்சி ஒன்றியத்தினர் பணம் வாங்கிச் சம்பளத்தைச் செலுத்திவிடலாம், ஒன்றியத்திற்கும் அரசுக்கும் ஏற்படுகிற அந்த வரவு-செலவுக் கணக்கைத் தனியாகப் பார்த்துச் சீர்திருத்திக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் ஜனவரி மாதம் 1-ந் தேதியிலிருந்து நேரடியாகச் சம்பளம் கொடுக்கும் வகையில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் குடியிருப்புகள்.

*** 67. வினா—திரு என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் (Government Estate) சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்காக வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. மு. சுருளிவேல்: தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றபோது நெடு நாட்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னையில் தங்க வேண்டியிருக்கிறது. சட்ட மன்ற